**07-01-2025**

**MCOP. No. 266/2022**

**ம.சா.1 – திருமதி. பாண்டீஸ்வரி**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்கள்.**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

M.C.O.P.No.266/2022 and M.C.O.P.No.265/2022 ஆகிய இருவழக்குகளும் ஒரே விபத்தில் காயமடைந்த நபர்களால் தாக்கல் செய்யப்பட் நிலையில் மேற்படி இரு வழக்குகளையும் கூட்டாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல செய்யப்பட்டு 3 ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் எவ்வித ஆட்சேபணையும் எழுப்பாத நிலையில் மேற்படி இரு வழக்குகளும் கூட்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சிய விசாரணை M.C.O.P.No.266/2022 வழக்கில் பதிவ செய்யப்பட்டது.

நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் நான் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது. நான் என் மைனர் மகள் புவனேஸ்வரிக்கும் சேர்த்து நிரூபண வாக்குமூலம் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சி சொல்லும் இந்த இரண்டு வழக்குகளும் கோவை நீதிமன்றத்தில் இருந்து மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்துள்ளது என்றால் சரிதான். எனது கணவர் இந்த விபத்தில் இறந்ததற்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்த வழக்கு பெரியகுளம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று நான் TVS 50 இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தேன். நானும் எனது கணவரும், எனது மகளும், எனது உறவினர் மகனும் பயணம் செய்தோம். நான் பயணம் செய்த வாகனத்தின்இருக்கை இரண்டு. இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் மட்டுமே பயணம் செய்ய வேண்டும்

என்று சாலைவிதிகள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். விபத்து சமயத்தில் மைனர் புவனேஸ்வரி வாகனத்தில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தார் என்றால் எனது கணவருக்கும் எனக்கும் இடையில் அமர்ந்திருந்தார். நானும், எனது மைனர் மகளும் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையில் ஒரு வாரமும், மதுரை ராஜாஜி மருத்துவமனையில் நான் ஒரு மாதமும், எனது மைனர் மகள் 3 மாத காலமும் சிகிச்சை பெற்று வந்தோம். மருத்துவமனையில் இருந்தபோது எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதா என்றால் அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை. நான் சிகிச்சையில் இருந்தபோது இடையிலேயே மருத்துவரின் ஆலோசனையை மீறி மருத்துவமனையை விட்டு வெளியேறினேன் என்றால் சரிதான். எனது மைனர் மகளுக்கு தலையிலும், நாடியிலும், வலது காலிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறுவை சிகிச்சை தொடர்பாக ஸ்கேன் அறிக்கை, மருத்துவ பரிந்துரை மற்றும் மருத்துவ விடுப்பு அறிக்கை முதலானவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்திற்கு முன்பு நான் கூலி வேலை செய்து மாத வருமானம் ரூ.15000/- வரை சம்பாதித்து வந்தேன். அதற்குரிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை. விபத்து சமயத்தில் எனது கணவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்குரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் இருந்தது. விபத்து சமயத்தில் எனது கணவர் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லக்கூடிய 1ம்எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்குரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்மந்தப்பட்ட ஆர்டிஓ அவர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்னுடைய கணவர் இயக்கிய இருசக்கர வாகனத்தின் அனுமதிக்கப்பட்ட இருக்கைக்கும் மேலாக 4 நபர்கள் பயணம் செய்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு தகுந்தஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கி அவர் காப்பீடு விதிமுறைகளை மீறியுள்ளதால், எனக்கு எந்த பரிகாரம் கிடைத்தாலும் அதை 1ம் எதிர்மனுதாரர் தனித்து நிறைவேற்ற கடமைப்பட்டவர் ஆவார் என்றால் சரியல்ல.

நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீட்டு உள்ளதா என்றால் உள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு தெரியாது. நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீட்டு இல்லாத காரணத்தினால் தான் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கோரிய இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

Digitally signed by G N SARAVANAKUMAR
Date: 2025.01.07 19:35:26 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 07-01-2025